JETIR.ORG ISSN: 2349-5162 | ESTD Year : 2014 | Monthly Issue
JOURNAL OF EMERGING TECHNOLOGIES AND INNOVATIVE RESEARCH (JETIR)
An International Scholarly Open Access, Peer-reviewed, Refereed Journal

# திருக்குறள் - வாழ்க்கை அறநெறி

முனைவர் அ.குமார்

உதவிப்பேராசிரியர் - தமிழ்த்துறை,

தொன்போஸ்கோ கல்லூரி

கெசு நகர், அத்தனாவூர், ஏலகிரிமலை

திருப்பத்தூர் மாவட்டம் 635853

**முன்னுரை**

ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்திற்கும், இனத்திற்கும் கதி இருவர் என்று கம்பரையும் திருவள்ளுவரையும் தமிழுக்கான அடையாளமாகவே பார்க்கிறோம். நம் தமிழ் இனத்திற்கான வாழ்வியல் கூறுகளைத் தன் படைப்பின் மூலம் மிகத் தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளார் வள்ளவர். இன்றும் அவரின் அறிவுத்திறனை உலகமே வியக்கின்றதாக இருக்கின்றது. வாழ்க்கையின் மகத்துவம் என்பது மூத்தோர் சொல்லியதின் படி நடந்துகொள்வது சாலச்சிறந்தது. வாழ்க்கையில் அவா்கள் அனுபவித்த சுக துக்கங்களை அடுத்தடுத்து வருகின்ற சமூகத்திற்கு கை மாற்றி கொடுப்பதினால்தான் இன்றும் இச்சமூகம் அறநெறியுடன் வாழ்ந்து வருகின்றது அதற்கு ஐயன் வள்ளுவன் எழுதிய திருக்குறள் பெரும் பங்களிப்பை கொடுத்திருக்கிறது, வாழ்க்கையில் எதை செய்யவேண்டும் எதைச் செய்யக்கூடாது என வள்ளுவ பெருந்தகை படைத்திருக்கிறார். அவர் வாழ்ந்த காலத்தை தாண்டி எதிர்காலத்தில் மனிதன் எங்கெல்லாம் வாழுகின்றானோ அங்கெல்லாம் இவர் எழுதிய குறள் இன்றும் வழிநடத்தி வருகின்றது. என்பதனை உதாரணங்களோடு விளக்கியுள்ளார். திருக்குறளின் கருத்துக்கள் தமிழ் மக்களுக்கு பெரும் கொடையாக இருக்கிறது என்பதனை இக்கட்டுரை ஆராய்கிறது.

**“வள்ளவன் தன்னை உலகினுக்கே தந்து**

**வான்புகழ் கொண்ட தமிழ்நாடு”**

என்று பாரதியாரால் புகழப்பட்ட திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள். மானுட வாழ்க்கை சிறப்பாக நடைபெற பல்வேறு அறக்கருத்துக்களை பட்டியலிட்ட வண்ணமே உள்ளது. காலங்கள் பல கடந்தாலும் மனித இனம் செம்மை அடைவதற்கான பல்வேறு அறக்கூறுகளை வழங்குவதில் திருக்குறளுக்கு இணை திருக்குறள் மட்டுமே என்று கூறினால் அது மிகையாகாது. மனதளவில் அடைந்துள்ள நோய்க்கு மருந்தாகவும், நவில்தோறும் அறியாமையைப் போக்குவதாகவும் மற்றும் நயம் பயப்பதாகவும் இத்திருக்குறள் திகழ்கின்றது. மேலும் எல்லா இனத்தவர்களுக்கும் பொதுவான கருத்துக்களை உரைக்கும் நூலாகவும்

இந்நூல் திகழ்கிறது. அற இலக்கியங்களுள் முதன்மையாக போற்றப்படும் திருக்குறள் தனிமனித அறம், குடும்ப அறம், வாழ்வியல் அறம், சமுதாய அறம், சமய அறம், உலகியல் அறம் என்று பல்வேறு அறக்கூறுகளை மனித இனத்திற்கு உணர்த்துகின்றது. அதில் வாழ்க்கைக்கு தேவையான அறங்களைக் குறித்து இக்கட்டுரை ஆராய்கின்றது.

**வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய அறம்**

வாழ்க்கை என்று சிறப்பாகச் சொல்லப்படுவது இல்லற வாழ்க்கையையே குறிக்கும். இல்லறத்தில் ஒருவன் ஈடுபடும் போதுதான் அவனது வாழ்க்கை நிறைவு பெறுகிறது. இல்வாழ்வை அறவழியில் நடத்த வேண்டும். அதுதான் பயனளிக்கும். எனவே வள்ளுவர் இல்லற வாழ்வுக்கு இன்றியமையாத அறத்தின் சிறப்பை எடுத்துக் கூறுகிறார். அன்பின் வழியாக பெறப்படுகின்ற விழுமியங்கள் இரணமாகிய மனதிற்கு அருமருந்தாக அமையும் என்பதில் எவ்வித ஐயமில்லை என்பதனை வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

வாழ்க்கைக்கு வேண்டிய சிறப்பையும் செல்வத்தையும் தருவது அறம். ஆகவே உயிர்க்கு அறத்தை விடவும் நன்மை தரக்கூடியது வேறில்லை என்று கூறுகிறார். இல்லற வாழ்வில் இணையும் ஆணும் பெண்ணும் மனதில் குற்றமற்றவர்களாக இருக்க வேண்டும். குற்றமற்று வாழ்வதே அறமாகக் கருதப்படுகிறது. கணவன் மனைவி இருவரும் ஒருமித்த மனதுடன் வாழும்போது அந்த வாழ்க்கை சிறக்கும் என்பதனை சுட்டிக்காட்டுகிறார்.

அறநெறியில் வாழ்ந்து பெறுகின்ற இன்பங்களே இனிய வாழ்க்கையின் இன்பங்களாகும். அறநெறியின் அடிப்படையில் அமைவது தான் அறத்தோடு பொருந்தாமல் நடப்பதெல்லாம் இன்பம் இல்லாதவை, புகழும் இல்லாதவை, பிறர் பழிக்கும் செயல்களைச் செய்யாமல் அறச்செயல்களை மட்டும் செய்தால் புகழ்சேரும் மற்றவர்களுடைய பொருளுக்கும் உடைமைக்கும் ஆசை கொள்ளும்போது அது சமூகத்தில் கெட்ட பெயரினையும் தனிமனித ஒழுக்கத்தையும் நடத்தையும் ஒன்றாக சேர்த்து குலைப்பதோடு உயிருக்கும் தீங்கு ஏற்படுத்திவிடும் என்பதனை பின்வரும் குறள்கள் வலியுறுத்துகின்றன.

**“மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அனைத்துஅறன்**

**ஆகுல நீர பிற”**

**“அறத்துடன் வருவதே இன்பம் மற்றுஎல்லாம்**

**புறத்த புகழும் இல”**

**“செயற்பாலது ஓரும் அறனே ஒருவற்கு**

**உயிர்பாலது ஓரும் பழி”**

என்று திருவள்ளுவர் அறநெறியில் அழுத்தமான நம்பிக்கை உடையவர். “மறந்தும் பிறர்க்கு கெடுதியானவற்றை நினைக்கக்கூடாது. அவ்வாறு நினைத்தால் நினைத்தவருக்குக் கெடுதி விளையும் மாறு அறமே செய்து விடும் என்கிறார்” பெற்ற தாயின் பசியையே காண நேர்ந்தாலும் சரி அதைப் போக்குவதற்காக சான்றோர் பழிக்கும் செயல்களைச் செய்யக்கூடாது என்றும் கூறுகிறார். வாழ்க்கையில் தொடர்ந்து நன்மைகளை செய்து வரும்போது அவை சிறந்த வாழ்க்கைக்கான அறத்தோடு நன்மைகளை உருவாக்கும் என்பதனை சுட்டிக்காட்டுகிறார்.

**வாழ்க்கையில் விருந்தோம்பலின் அவசியம்**

இல்வாழ்வின் சிறப்பு விருந்தோம்பல் எனும் பண்பாகும். வீட்டில் இருந்து பொருள்களைக் காத்து, இல்வாழ்க்கை நடத்துவது எல்லாம் விருந்தினரைப் போற்றி உதவி செய்யும் பொருட்டே ஆகும். கோவலன் கண்ணகியைப் பிரிந்து சென்று மீண்டும் வந்து, என்னைப் பிரிந்த போது வருத்த மடைந்தாயா? எனக் கேட்டான். அப்பொழுது கண்ணகி விருந்தினரை உபசரிக்க முடியாமல் சோர்ந்து போனேன் என்றாள். விருந்தோம்பல் கணவனும் மனைவியும் செய்ய வேண்டிய உயர்ந்த செயல் விருந்தினர் வரும் போது வீட்டில் பெண் இல்லை என்றால் உபசரிக்க முடியாது. விருந்தோம்பல் என்னும் பண்பு குறைந்து வருகிறது. அதைப்போக்க வள்ளுவர் கூறும் விருந்துபுரத்தலை அறிய வேண்டும்.

செல்வந்தராக இருந்தாலும் வறுமை என்பது வீட்டிற்கு வரும் விருந்தினரை உபசரிக்காத தன்மையே ஆகும். விருந்தினராக வந்தவரை முகமலர்ச்சியும் அகமலர்ச்சியும் கொண்டு வரவேற்றால் செல்வமகள் “லெட்சுமி” மகிழ்வுடன் தங்குவாள். விருந்தினரை உபசரித்தால் செல்வம் குறையாது. இதனையே,

**அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து**
**நல்விருந்து ஓம்புவான் இல்**

என்று வள்ளுவர் கூறுகிறார். ஒருவனுக்கு உணவு இல்லையெனில் இந்த இனத்தையே அழிவத்துவிடுவேன் என்று பாரதி கூறும்போது அறமாக பார்க்கப்படுகிறது அதற்கு முன்னமே வள்ளுவன் ஈகை குறித்த கருத்துகளை மிகச் சிறப்பாக பதிவு செய்திருக்கிறார்.

**வாழ்க்கையில் கல்வியின் அவசியம்**

மனித இனத்திற்கு கிடைத்த கொடை கல்வி என்பதனை வள்ளுவர் வெளிச்சமிட்டு காட்டுகிறார் மனிதன் மகானாக மாறுவதற்கு அவன் மனிதனாகவே வாழ்வதற்கும் இன்றியமையாதது கல்விதான் என்பதனை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே தெளிவுபடுத்தியுள்ளார். கல்வி இல்லையேல் வாழ்க்கையே இல்லை எனலாம். வாழ்க்கைக்கு எந்த நிலையிலும் கல்வி பெரிதும் இன்றியமையாதது. கற்கத் தகுந்த நூல்களைத் தெளிவாகக் கற்க வேண்டும். கற்ற கல்விக்குத் தக்கவாறு அது கூறிய நெறிப்படி நிற்க வேண்டும். கற்றபடி உயர்நெறியில் நின்றால், வாழ்வில் உயர்நெறிகள் அனைத்தையும் பெறலாம். தெளிவாகக் கற்றால் யார் துணையும் இல்லாமல் வாழ்வில் வெற்றிப் பெறலாம் என்பதை,

**“கற்க கசடறக் கற்பவை கற்றபின்**

**நிற்க அதற்குத் தக”**

என்று வள்ளுவர் கூறியுள்ளார். இக்குறட்பாவில் நெட்டெழுத்துக்கள் எதுவும் இல்லாமல் முழுவதும் குன்றெழுத்துகளால் நிறைவு செய்யப்பட்டுள்ளது. குற்றெழுத்துக்கள் அடுத்து ஒரு துணை எழுத்து வந்தால் (க-கா) அவ்வெழுத்து நெடிலாகிறது. கற்க கசட... என்ற குறட்பாவில் துணை எழுத்தே இல்லை. அதாவது கற்க வேண்டியவைகளைக் கசடறக் கற்றால் யாருடைய துணையும் இல்லாமல் வாழ்வில் முன்னேறலாம் என்பதை தெளிவாகக் எடுத்துக்காட்டுகிறார்.

ஆற்றில் தண்ணீர் இல்லாத காலத்தில் ஆற்று மணல் பரப்பில் தோண்டினால் தோண்டிய அளவிற்கே தண்ணீர் ஊறும். இதுபோன்று, கற்ற கல்வியின் அளவுக்கு ஏற்பவே அறிவு ஊறும். எனவே நிறைவாக கற்க வேண்டும். கற்கக் கற்க அறிவு வளரவே செய்யும் என்பதில் ஐயமில்லை, இதனையே,

**“தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்கு**

**கற்றனைத்து ஊறும் அறிவு”**

என்கிறார் வள்ளுவர்.

**தனிமனித வாழ்வும் சமூக வாழ்வும்**

மனிதன் கூடிவாழப் பிறந்தவன். மனித வாழ்வின் வளர்ச்சிக்கும், பாதுகாப்பிற்கும் கூடி வாழும் ஒரு சமூக அமைப்புத் தேவைப்படுகிறது. பண்பாட்டுடன் கூடிய சமூகக்கட்டமைப்பில் தான் உலகம் பிணைக்கப்பட்டுள்ளது. “ஒருவர் எல்லோருக்காகவும், எல்லோரும் ஒருவருக்காகவும்” என்ற தத்துவம் சமூகக் கட்டமைப்புக்கானது. தம்மிடம் மற்றவர்கள் எப்படி நடந்துக் கொண்டால் மகிழ்ச்சி ஏற்படுமோ அதுபோல் நாம் மற்றவர்களிடம் நடந்து கொள்வதே உயர்ந்த சமூகப்பண்பு இதைத்தான் வள்ளுவர்.

**ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றயான்**

**செத்தாருள் வைக்கப்படும்** (குறள் - 214)

**உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்**

**கல்லார் அறிவிலா தார்** (குறள் - 140)

**“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**

**தெய்வத்துள் வைக்கப்படும்”**

இக்குறளில் மற்றவர்களின் ஒத்தது அறிந்து இயல்பாக ஒத்துப்போதலே ஒப்புரவு வாழ்க்கையின் சிறந்த இலக்கணமாக அமைந்தது.

**தனிமனித ஒழுக்கம்**

ஒழுக்கம் ஒன்றே நம்மை மனித நிலையிலிருந்து தெய்வ நிலைக்கு உயர்த்தும். நம்மை மட்டுமின்றி நம் முன்னோர்களையும் நாம் உருவாகும் நம் சந்ததியையும் உலகுக்கு அறிமுகம் செய்வது இந்த ஒழுக்கம் ஒன்றே. ஒருவருடைய வாழ்வில் உயர்வு, தாழ்வு ஏற்பட அடிப்படைக் காரணமாக இருப்பது அவருடைய ஒழுக்கப்பண்பே ஆகும். இத்தகைய ஒழுக்கத்தின் சிறப்பினை வள்ளுவர்,

**"ஒழுக்கம் விருப்பம் தரலான் உழுக்கம்**

**உயிரினும் ஓம்பப் படும்"**

என்ற குறளைக் கொண்டு வள்ளுவர் கூறியுள்ளார். மேலும் ஒழுக்கம் என்பதற்கு சீலம், நன்னடத்தை, உலகம் கூறிய நீதியிலிருந்து தவறாமை என வேறுபொருளும் கூறப்படுகின்றன. ஒழுக்கத்தினால் வரும் நீதிநெறிகளைப் பின்பற்றி வாழவேண்டும். அப்பொழுதுதான் சமூக வாழ்வு சீரடையும் நீதிநெறிகளும், ஒழுக்கநெறிகளும் வாழ்க்கையின் அடித்தளமாகும். அன்றாட வாழ்க்கையில் நம் கடமைகளை முறையாகச் செய்வதும் ஓர் ஒழுக்கமே. தனிமனிதனுக்கும் நாடாளும் தலைவனுக்கும் இல்லறத்தின் கண் வாழ்பவனுக்கும், துறவறம் மேற்கொள்ளும் துறவிக்கும் மிகமிக முக்கியமான பண்பாகத் திகழ்வது ஒழுக்கமேயாகும். இதன் சிறப்பினைக் கருதியே சான்றோர்கள் ஒழுக்கத்திற்கு உயரிய இடத்தினைத் தந்துள்ளனர். மனிதனாக பிறப்பதே சிறப்பு வாய்ந்தது ஆனால் அவன் மிகுந்த பக்தியோடும் ஒழுக்கத்தோடும் வாழும்போது அவன் வாழுங்காலத்திலே சிறப்பு பெற்றவனாகவும், தெய்வநிலையோடும், மற்றவர்கள் போற்றி புகழக்கூடியவனாக வாழும்போது பாராட்டுவார்கள் என்பது திண்ணம்.

**முடிவுரை**

இவ்வாறு திருவள்ளவர் கூறும் வாழ்க்கை அறத்தின் பாற்பட்டது. அறத்தின் சிறப்பும், இல்வாழ்க்கையின் இன்பமும், பிறர்க்குக் கொடுத்து மகிழ்தலும், ஒழுக்கமுடைமையின் உயர்வும், புகழோடு வாழவும் இன்னபிற வள்ளுவரின் கருத்துக்கள் நமக்கு நல்வாழ்வு வாழ வழிகாட்டுகின்றன. நாமும் அடுத்த தலைமுறைக்கு சொத்து சேர்ப்பது எப்படி முக்கியமோ அதுபோல் நம் முன்னோர் எழுதி வைத்த வாழ்க்கைக்கு தேவையான விழுமியங்கள் அவசியம் என்பதை உணரும் தருணம் இவையாவும் வள்ளுவர் காட்டும் வாழ்க்கையாம். மனிதனின் குறைந்தபட்ச வாழ்க்கையில் நேர்மையும் அறமும் நடத்தையும் அன்பும் உழைப்பும் உயர்வும் தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ள இன்றும் நம் வீட்டின் புத்தக அறையில் ஐயன் வள்ளுவன் எழுதிய திருக்குறளை வாசிக்கவும் அதை இச்சமூகத்திற்கு அளிக்கவும் என்னாலும் தயக்கம் கொள்வது என்பது இல்லாதிருக்கவேண்டும் அப்பொழுதுதான் வள்ளுவனின் தொலைநோக்கு சிந்தனை மக்கள் சமூகத்திற்கு சென்றடையம் என்பதில் தடையேதும் இல்லை இவை வளமாகவும் மேன்மையுடையதாகவும், போற்றுவதற்குரியதாகவும் விளங்க வள்ளுவர் வழங்கிய திருக்குறளைக் நாள்தோறும் பேணிக்கற்போம் வாழ்க்கையில் எல்லோரும் கடைப்பிடிப்போம்.